**காலி மரபுரிமை மன்றம் - 2017**

---

காலி மரபுரிமை மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காலி மரபுரிமை மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஏனைய பெற வேண்டியவைகள், முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளதை விட ரூபா 1,789,149 தொகை அதிகரித்திருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 2,158,885 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மற்றும் அட்டுறு செலவினம் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளதை விட ரூபா 1,421,099 தொகை தேறியதாக அதிகரித்திருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 39,527 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது முதலீடுகள் செய்யப்படாதிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் புதிய முதலீடாக ரூபா 20,988,055 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் அமைச்சிலிருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 4,282,202 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 14,849,202 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) காசும் மற்றும் காசுக்குச் சமமானவையுமாக குறித்த பணப் பெறுமதிக்கு இலகுவாக மாற்றம் செய்யக்கூடிய குறுங்கால, மிகவும் உயர் திரவத் தன்மையுடைய முதலீடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தின் கணக்கீட்டுக் கொள்கைளயின் பிரகாரம் 03 வருட நிலையான வைப்புக்களில் முதலீடு, காசு மற்றும் காசுக்குச்

சமமானவைகளாக இனங்காணப்பட்டிருந்தன. அதனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காசு, காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக ரூபா 3,447,296 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 41,202,537 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்களுக்காக கணக்காய்வின் போதான கணிப்பீடுகளின் பிரகாரம் மீதி ரூபா 2,231,075 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வரிசை அமைச்சிலிருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 2,150,000 தொகை மீண்டெழும் மானியமாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 2,150,000 தொகை அதிகரித்தும், மூலதன மானியம் அப்பெறுமானத்தால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 435,803 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் போது ரூபா 91,950 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதி ரூபா 343,853 ஆக இருக்க வேண்டிய போதிலும், ஐந்தொகையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 13,853 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்தின் காசேட்டின் பிரகாரம் நடைறைக் கணக்கு மீதி ரூபா 1,395,077 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமை விபரங்களில் வங்கி நடைமுறைக் கணக்கில் காசு மீதியின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 410,745 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,496,887 ஆகக் கொண்டுவரப்பட்டமையின் காரணமாக திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 1,086,142 தொகை அதிகரித்தும், இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் தேறிய பெறுமதி அந்த பெறுமானத்தால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானத்தைக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 1,003,556 தொகையான வட்டி வருமானமொன்று காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 18 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் பரீட்சை மீதியில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே கூட்டுமொத்தமாக ரூபா 7,344,621 இணங்காமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்களின் கிரயம் | 38,864,667 | i. நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு<br>ii. மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| பிரதான பேரேடு | 41,436,719 | 27 பேரேட்டுக் கணக்குகள் |
| இருப்பு | 792,865 | i. இருப்புப் புத்தகம்<br>ii. விரிவான இருப்புப் பதிவேடு<br>iii. இருப்பு காலப்பகுப்பாய்வு |
| ஏனைய பெறவேண்டிய கணக்குகள் | 2,983,197 | i. பெறவேண்டிய கணக்கிற்கான பதிவேடு<br>ii. மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்<br>iii. காசுப்பகுப்பாய்வு |
| ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகள் | 468,141 | i. மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்<br>ii. செலுத்த வேண்டிய கணக்கிற்கான பதிவேடு<br>iii. காலப்பகுப்பாய்வு |
| நானாவித கொடுப்பனவுகள் | 252,981 | கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் பதிவேடு |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப்பிரமாணம் 137 | உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுப்பெறுமதி ரூபா 721,545 தொகையான 12 உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 257 | சான்றுபடுத்திய உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட முடியுமாக இருந்த போதிலும் கூட்டுப்பெறுமதி ரூபா 634,382 தொகையான 19 உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 272 | கொடுப்பனவுக்குரிய சகல உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுப்பெறுமதி ரூபா 551,440 தொகையான 14 உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 386(6) | சகல காசோலைகளும் கட்டளையின் படி செலுத்துக என எழுதி குறுக்கு கோடிட வேண்டும். அவ்வாறே திறந்த காசோலை விநியோகிப்பதற்காக பதவிநிலை உத்தியோகத்தருக்கு விசேட அதிகாரம் தேவையாக இருந்த போதிலும், அவ்வாறான அதிகாரமின்றி மன்றத்தால் கூட்டுப்பெறுமதி ரூபா 786,287 தொகையான 08 காசோலைகள் குறுக்கு கோடு இரத்துச் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கிக் கணக்கு உள்ள சகல நிறுவனங்களாலும் ஒவ்வொரு மாத இறுதியின் போதும் கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் யூலை மாதம் திசெம்பர் மாதம் வரையிலான வங்கி இணக்கக் கூற்று அறிக்கைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மன்றத்தின் பொருட்களின் சரி, பிழைகள் பார்ப்பதைப் போன்று பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் பின்னர் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | நிதிப்பிரமாணம் 1646 | ஒவ்வொரு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் அதற்கு முந்திய மாதத்தின் வாகனப் பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பு, 268(அ) பொது மாதிரிப் படிவத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் உரிய நாளாந்த ஓட்ட அட்டவணையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணை குறிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2006 இன் அரசாங்க பெறுகைகள் கோவை | பெறுகை வழிகாட்டியிக் கோவையின் 2.7.5 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழு வரிசை அமைச்சின் செயலாளரான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமல் மன்றத்திற்கு தேவையான பிரகாரம் பெறுகைக்குழு 2017 ஆம் ஆண்டிற்காக நியமிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,359,778 ஆன மிகையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,258,813 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,899,035 வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மூலதன செயற்திட்ட செலவினம் ரூபா 1,565,310 இனால் அதிகரித்திருந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் போது ரூபா 2,824,939 ஆன பற்றாக்குறை, 2014 ஆம் ஆண்டு முதல் தளம்பல்களுடன் மீளாய்வாண்டு வரையில் ரூபா 1,359,778 மிகை வரை அதிகரித்திருந்தது. எனினும் நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கவனத்திற் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,877,576 தொகையான மன்றத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 11,151,762 வரை தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது அது ரூபா 8,231,924 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 மன்றத்திற்கு எதிராக அல்லது மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

2011 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்ட பெண் ஊழியர் ஒருவரை சேவையிலிருந்து அகற்றியதன் பின்னர் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மன்றத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கிற்காக 2017 திசெம்பர் 31 வரையில் வழக்கறிஞர் கட்டணமாக மன்றத்தால் ரூபா 150,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 - 2017 இன் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் சரியான கழிவுப்பொருள் முகாமைத்துவ கொள்கையை அமுல்படுத்தும் செயற்திட்டம் மற்றும் மழைக் காடுகளைப் பாதுகாக்கும் அமைப்புடன் சேர்ந்து காலிக் கோட்டையில் இனங்காணப்பட்ட இடங்களில் பசுமை வலயத்தை ஆரம்பிப்பதற்கு

திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பசுமை வலயத்தை ஆரம்பித்தல் மீளாய்வாண்டு வரையிலும் இடம்பெறவில்லை.

(இ) 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவில் காணப்படுகின்ற மன்றத்தின் நோக்கங்களில் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்று பின்னணியுடைய நிலப்பரப்பினுள் அமைந்துள்ளதும் வரலாற்று பின்னணி, கலாசார மற்றும் அழகியல் பெறுமதி கொண்டதுமான சில அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை கைப்பற்றல், ஏற்றல், பேணிச்செல்லல் மற்றும் அகற்றுதல்.

(ii) காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலத்தில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களை பாதுகாப்பதன் மூலம் காலிக் கோட்டையினுள் குடியிருப்போரின் அக்கறையினை மேம்படுத்தல்.

(iii) காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் உட்பிரவேசித்து பார்வையிடுவதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தல்.

(iv) காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் குடியிருப்போரின் சாதாரண நலன்களை மேம்படுத்தல்.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(i) காலிக் கோட்டையை பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணித்தல், வெள்ளை மடத்தின் கண்காட்சி மேடையின் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையத்தை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகளை ரூபா 14,800,000 தொகையான கிரயத்தின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மலசலகூட தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் வெள்ளை மடத்தின் கண்காட்சி மேடையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்தெம்பர் 30 அந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தகவல் நிலையத்திற்காக ரூபா 1,030,129 தொகை செலுத்தி தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்தெம்பர் 30 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காலி கோட்டையில் உள்ள படிக்கட்டுக்களை பழுதுபார்த்தல், றும்பாட் சுவர் (Rampart Wall) மற்றும் தேவையற்ற புற்களை அகற்றுதல் என்ற பணிகளை ரூபா 3,500,000 கிரயத்தின் அடிப்படையில் நிறைவேற்றுதவற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் புற்களை வெட்டுவதற்காக ரூபா 794,025 மாத்திரம் செலவிடப்பட்டிருந்த போதிலும், ஏனைய பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

(iii) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட மூலதன செயற்திட்டத்திற்காக வரிசை அமைச்சிலிருந்து ரூபா 9,580,000 தொகை கிடைத்திருந்ததுடன் அதில் மூலதன செயற்திட்டத்திற்காக ரூபா 3,073,374 தொகையும், நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,305,769 தொகையும், காலி கோட்டையில் புற்களை வெட்டுவதற்காக ரூபா 2,053,059 தொகையும் மாத்திரம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டு ஆண்டின் இறுதியின் போது

அமைச்சிற்கு ரூபா 3,147,798 தொகை மீள அனுப்பப்பட்டிருந்தது. மன்றத்திற்கு தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கிடைத்த பணம் திட்டமிடப்பட்ட பணிகளுக்காக முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்திற்கு அதிகளவு அதிகாரங்களை உரித்தாக்குதல் மற்றும் மன்றத்திற்கு வருமானம் ஈட்டும் முறையொன்றினை அமுல்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினை திருத்தும் தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை பிரமாணக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அந்த அதிகாரச்சட்டத்தின் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) யுனெஸ்கோ அமைப்பினால் காலிக் கோட்டை உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டிருந்ததுடன், அதற்கமைய காலிக் கோட்டையினை பாதுகாப்பதற்காக யுனெஸ்கோ அமைப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் யுனெஸ்கோ அமைப்பின் வழிகாட்டிகளுக்கும் (Guidelines) இணங்க செயற்படுத்துவதற்கு காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் காலிக் கோட்டையினுள் தற்போது இனங்காணப்பட்டுள்ள அனுமதியற்ற 28 நிர்மாணங்களுக்கிடையே 06 இடங்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 22 அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முகாமைத்துவ சபை தவறியிருந்தது. மேலும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக காலி மரபுரிமை மன்றத்திற்கு சட்டரீதியான ஏற்பாடு இல்லாதிருந்ததுடன் தொடர்புடைய நிறுவனம் அதற்காக துரிதமாக ஈடுபடும் இயலுமையும் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இவ்வாறான நிலைமைக்கு தீர்வினை தயாரித்தல் தொடர்பாக முகாமைத்துவம் போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) இலங்கை தபால் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற காலி கோட்டையில் அமைந்துள்ள பழைய தபால் அலுவலகக் கட்டிடத்தைச் சுற்றி வியாபித்துக் காணப்பட்ட ஆலமரம் மற்றும் ஏனைய சிறிய மரங்களை விஞ்ஞான ரீதியில் அகற்றுவதற்காக ரூபா 78,500 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், சுவருடன் வளர்ந்துள்ள ஏனைய மரங்களை விஞ்ஞான ரீதியில் கொல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக பள்ளி குறுக்கு வீதி, உபவீதியின் எல்லையில் இந்தக் கட்டிடத்தின் உடைந்து விழுந்துள்ள பிரதான சுவர் கட்டினால் அந்த இடத்தை பாதுகாப்பற்ற பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தொல்பொருளியல் திணைக்களத்துடன் காலிக் கோட்டையை பாதுகாக்கும் பணிகள், மன்றத்தால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட கட்டிடத்தின் சுவரைப் பாதுகாப்பதற்காக இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

காசோலை அடியிதழ் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய காசேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 7,663 தொகையான 04 காசோலைகளின் திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரையில் 2018 செப்தெம்பர் 27 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் சனவரி முதல் மார்ச் வரையான காலத்திற்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்களில் இந்த 04 காசோலைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,077,788 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஏப்ரல் முதல் வங்கி இணக்கக் கூற்றுக்களில் 04 காசோலைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 7,663 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.4 தாமதமான செயற்திட்டங்கள்**

காலிக் கோட்டையில் காணப்படும் வெள்ளை மடத்தில் யுத்த அறையின் கீழ் விஜித வரலாற்றுடனான கண்காட்சி கூடமொன்றாக மாற்றியமைக்கும் பணி 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 11,474,476 செலவிடப்பட்டுள்ள போதிலும், கண்காட்சிக் கூடத்தின் பணிகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்தெம்பர் 30 வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டில் இக்கண்ககாட்சிக்காக ரூபா 1,520,000 செலவிடப்பட்டு வரையப்பட்ட 16 சித்திரங்கள் 04 வருட காலமாக தகவல் நிலையத்திலும் ரூபா 3,180,000 செலவிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 12 சிலைகள் கண்காட்சிக் கூடத்தினுள்ளும் 04 வருட காலமாக வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சித்திரங்களினதும் சிலைகளினதும் பாதுகாப்பிற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக 2006 சனவரி 02 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையும் வருடாந்தம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு சேவையாற்றுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 அபிவிருத்தி உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இருக்கின்ற மூன்று கலாசார உத்தியோகத்தர்கள் காலி மரபுரிமைகள் மன்றத்தின் செயற்திட்ட உதவி உத்தியோகத்தராக 2006 ஆம் ஆண்டிலிருந்து நியமிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் 05 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் செயற்திட்ட உதவியாளர் பதவி என்பன தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு காலி மரபுரிமை மன்றத்தின் முகாமைத்துவ சபை தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக காலி மரபுரிமை மன்றத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பன தொடர்பாக அறிவிக்காமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய முறைகள், இலக்குகள் என்பவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2005 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ 27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றம் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை 213 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 ஒக்தோபர் மாதம் 03 ஆந் திகதியே சமர்ப்பித்திருந்தது.

### 6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், காலி மரபுரிமை மன்றத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டில் பாதீட்டிற்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே 3 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையில் நேர் முரண்களும் 23 சதவீதம் முதல் 268 சதவீதம் வரையில் மறை முரண்களும் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 6.4 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 6.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2018 மார்ச் 21 அந் திகதிய எஸ்என்பீ/ஜீஎஸ்/ஈ/ஜீஎச்எப்/எப்/ஏ/2017/19 ஆம் இலக்க 2016 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பான இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலி மரபுரிமை மன்றம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை. |
| | (ii) நிலையான சொத்துக்களை கணக்கு வைத்தல் தொடர்பில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை. |
| | (iii) நிலையான சொத்துக்கள் தொடர்பில் ஆண்டின் இறுதியில் பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிராமை. |
| (ஆ) கணக்கீடு | (i) நிலையான வைப்பு வட்டி வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்படாமை |
| | (ii) பரீட்சை மீதியின் பெறுமதிக்கும் நிதிக்கூற்றுக்களின் பெறுமதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| | (iii) பரீட்சை மீதிக்கும் பேரேட்டுக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| | (iv) முறையான அங்கீகாரத்துடன் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் தயாரிக்கப்படாமை. |
| | (v) கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதங்களின் படி பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படாமை |
| | (vi) பேரேட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களுக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படாமை |
| | (vii) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரித்தலில் தாமதம் காணப்பட்டமை. |
| | (viii) நிலையான வைப்புப் பதிவேடு சரியாக நாளதுவரையாக்கப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ix) | காசோலை கையேற்றல் உறுதிப்படுத்தப்படாமை. |
| (இ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | (i) | நிலுவை வாடகை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |
| | | (ii) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமை. |
| (ஈ) | பெறுகைகள் | (i) | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாமை |
| | | (ii) | பெறுகை குழுவை நியமித்தல் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க இடம்பெறாமை |
| | | (iii) | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமை |
| (உ) | கோவைகள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் | (i) | ஆளணிக் கோவைகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (ii) | அங்கத்தவர் கடன் பதிவேடு பேணப்படாமை. |
| | | (iii) | நிலுவை உறுதிச்சீட்டுக்கள் காணப்பட்டமை |
| | | (iv) | உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| | | (v) | வருமானப் பதிவேடு மற்றும் கைவிரல் அடையாள இயந்திர பதிவுப் பத்திரம் சரியான பிரகாரம் பேணப்படாமை. |
| (ஊ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | காசேட்டினதும் காசோலை அடியிதழின் திகதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டமை. |
| | | (ii) | முற்பணம் தீர்த்தல் விபரம் குறித்துரைத்த பிரகாரம் காண்பிக்கப்படாமை. |